MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# சங்க இலக்கியத்தில் விளையாட்டுகள்

திருமதி **மா.முத்துச்செல்வி**,
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டார்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.12773629.

Abstract :

Hunting with animals and handling weapons may have led to sport among Sangam people in tribal societies. The people of the Sangam period considered sports to be mostly a social activity. Team sports and athletic sports can be considered social activities as they are played in front of everyone and in the middle of the field. Sports in general can be said to be "a training ground for life"1. Also, the scholars say that the game is "the game that is desired"2 "the game that gives pleasure"3 "the game that results in the rules"4; Explained.

It seems that people of the Sangam period played games that suited their land structure. Sangam literature records adolescent women playing games such as flower-picking, funnel-playing, pendulum swinging, ball-playing, sandcastle-building, oraidal, mud-digging, and hand-holding games such as vegetable picking.
Key Words : Sangam Literature - Womens' Play

இனக் குழுச் சமூகத்திலிருந்த சங்ககால மக்களிடையே விலங்குகளைக் கொண்டு வேட்டையாடியமை ஆயுதங்களைக் கையாண்டமைப் போன்றவை விளையாட்டிற்கு வழிவகுத்திருக்கும் எனலாம். பெரும்பாலும் சமூகம் சார்ந்த செயல்பாடாகவே விளையாட்டை சங்க கால மக்கள் கருதினர். குழு விளையாட்டுகளும்வீர விளையாட்டுகளும் அனைவரின் முன்னிலையிலும்மைதானத்தின் நடுவிலும் நடைபெற்றமையால் இவற்றைச் சமூகம் சார்ந்த செயற்பாடாகக் கருதலாம். பொதுவாக விளையாட்டு என்பது "வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களமெனக் கூறலாம்" [1] என்பர். மேலும், விளையாட்டு என்பதற்கு "விரும்புகின்ற ஆட்டம்" [2] "இன்பம் விளைவிக்கும் ஆட்டம்" [3] "விதிகளை விளைவித்துக்கொண்டு ஆடும் ஆட்டம்" [4] என்றும் அறிஞர்கள் ; விளக்கம் அளித்துள்ளனர்.

சங்க கால மக்கள் தமது நில அமைப்பிற்கு ஏற்ற விளையாட்டுகளை விளையாடினர் எனலாம். பூக்கொய்தல், புனல்விளையாடல், ஊசல் அயர்தல், பந்தாடுதல், மணலிற் சிறுவீடுகட்டுதல், ஓரையாடல், வண்டலிழைத்தல் மற்றும் கழற்சிக்காய் போன்றவற்றைக் கைகளால் பிடித்து விளையாடுதல் போன்ற விளையாட்டுக்களை இளம்பருவ மகளிர் விளையாடியுள்ளமையைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

**கழங்காடுதல்:**

சங்ககாலத்தில் பருவமகளிர் விரும்பி விளையாடும் விளையாட்டாக கழங்காடுதல் இருந்துள்ளது. "இயற்கையில் கிடைத்த காய்களைக் கொண்டு எறிந்தும் எடுத்தும் உயரத்தூக்கிக் போட்டும் கீழே கொட்டியுள்ளதை எடுத்தும் ஆடியுள்ளனர். பெண்கள் தங்களது இல்லங்களில் பின்புறத்திலும் மரநிழலிலும் மேன்மாடங்களிலும் அமர்ந்தும் விளையாடுவர். இருவர் விளையாடுவது. பந்தயங் கூறியாடுவது பாட்டுப்பாடிக் கொண்டே ஆடியுள்ளனர். நாளடைவில்


http://Creativecommons.org//license/by/4.0/.

பொன்மணிமுத்து பூக்களால் ஆன கிழங்கு கொண்டு ஆடியுள்ளனர். கைக்குள் அடங்கக்கூடிய கழங்குக் காய்கள் விளையாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன ”[5] என்பதிலிருந்து கழங்காடல் குறித்து அறியலாகின்றது. கூரை வீடுகளிலுள்ள தொடியணிந்த மகளிர் முற்றத்து மணலில் விளையாடும் விளையாட்டாகக் கழங்காடுதல் இருந்துள்ளமையைக்,

“**கூரைநன்மனைக் குறுந்தொடி மகளிர்**
**மணலாடு கழக்கின்”** (**நற்.பா.**79:2-3)

என்ற பாடலடிகள் விளக்கி நிற்கின்றன.

**சென்னியர் ஆடல்:**

நீராடிய மகளிர் இசைக்கருவிகள் முழங்க ஒருவர் தலைமேல் ஒருவர் நின்று உடல் வளைத்து வித்தை காட்டியிருக்கின்றனர். இதனைச் சென்னியர் ஆடல் என்கிறது பரிபாடல்.

**“புரிநரம்பு இன்கொளைப் பகல்பாலை ஏழும்**
**ஏழுஉப்புணர் யாழும் இசையும் கூடக்**
**குழல் அளந்து நிற்பமுழவு எழுந்து ஆர்ப்ப**
**மன் மகளிர் சென்னியர் ஆடல் தொடங்க” (பரி.பா.7:77-80)**

என்ற பாடலடிகள் சென்னியர் ஆடலைப் பதிவு செய்துள்ளன.

**கழையாடல்:**

சிறுவர்கள் என்றாலே போலச்செய்தலே அனைவரின் நினைவிற்கும் வரும். அவ்வகையில் குரங்கு தன் குட்டியுடன் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மூங்கில் நுனியைப் பற்றி வளைந்து தவ்வியமையைக் கண்ட குறவர் இனச் சிறார்கள் தாங்களும் அவ்வாறே மூங்கில் கொம்பைப் பற்றி வளைத்து ஆடியமையை

**“செம்முகத் துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்**
**குழைக்கண் இரும்பொளை ஏறி விசைத்தெழுந்து**
**குறக்குறு மாக்கள் தாளம் கொட்டும் குன்றகம்” (நற்.பா.95)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாம்.

**வல்லாட்டம்:**

சங்ககாலப் பலகை விளையாட்டுகளில் ஒன்று வல்லாட்டம் ஆகும். இஃது இருவர் இணைந்து ஆடும் ஆட்டமாகும். “வல்லாட்டம் ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகும். திட்டமிட்டும்திட்டமிடாமலும் ஆடும் ஆட்டமாகும். வீடுகளிலும் பொதுஇடங்களிலும் ஆடியுள்ளனர். இவ்வாட்டத்தி;ற்குப் பயன்படுத்தியப் பொருட்களை ஆயம்கவறுவட்டுவல் போன்ற பெயர்களால் அழைத்துள்ளனர். முதியவர்கள் ஊர்ப்பொது இடங்களில் ஆடியுள்ளனர்”[6] என்பதிலிருந்து வல்லாட்டம் குறித்தக் கருத்தினை அறிந்துகொள்ள முடிகின்றது. பெரும்பாலும் போட்டி விளையாட்டாக இவ்விளையாட்டு ஆடப்பட்டிருக்கின்றது. இவ்விளையாட்டிற்கு வல்லுப்பலகை இருந்துள்ளமையை

“**குறிப்புகாண் வல்லுப்பலகை எடுத்து நிறுத்தன்ன**
**கல்லாக்குறள ..........”** (**கலி.பா.**94:13-14)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாம். அதுமட்டுமன்றி முதியோர் விளையாடும் விளையாட்டாக விளங்கியமையையும்ஊர்ப்பொது மன்றத்திலே இவ்விளையாட்டிற்கு பயன்படக்கூடிய வல்லுப்பலகை மரத்தால் செய்யப்பட்டு இருந்தமையையும்

"**கொழுங் குடி போகிய பெரும் பாழ் மன்றத்து**
**நரை மூதாளர் அதிர் தலை இறக்கி**
**கவை மனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய**
**வரி நிறச் சிதலை அரித்தலின்**" (**அகம்.பா**.377:6-9);

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. மேலும்நரைத்த தலை கொண்ட முதியவர்கள் தம் ஆடும் தலையை வைத்து ஊர் பொதுமன்றத்தில் படுத்திருப்பர் என்று முதியோரின் நிலையும் சுட்டப்பட்டுள்ளது. இன்றும் முதியவர்கள் பலருக்கு நரம்புதளர்ச்சியின் காரணமாக தலையாடுதல் என்பது இயல்பே. அதையும் மிகவும் இயல்பாக அகநானூறு பதிவு செய்துள்ளமையைக் காணலாகின்றது.

**பந்தாடுதல்:**

சங்ககாலத்தில் குறிப்பிடத்தகுந்த விளையாட்டாக பந்தாடுதல் திகழ்ந்துள்ளது. "உருண்டை வடிவமுள்ள விளையாட்டுக்கருவி. கைவிரல்; ரேகை பந்தின் மீது பதிந்துவிடும் அளவு பளபளப்பான மேற்பரப்பு கொண்டது. மாலைநேர விளையாட்டாகவும்தனியாகவும் சேர்ந்தும் விளையாட்டாகும்" [7] பெரும்பாலும் பெண்களே இவ்விளையாட்டை விளையாடியுள்ளனர். இவ்விளையாட்டு வீட்டு முற்றத்திலும்மாடங்களிலும்மணல் மேடுகளிலும் ஆடப்பட்டுள்ளது. நூலினால் செய்யப்பட்ட இந்தப் பந்தில் பல வேலைப்பாடுகள் காணப்பட்டுள்ளன. பந்து விளையாட்டின் போது பெண்கள் ஆயத்தாருடன் இணைந்து விளையாடினமையை

"**ஆயமொடு கெமீஇப் பந்துவழிப் படர்குவள்**" (**அகம். பா**.153:3)

என்ற பாடலடி வாயிலாகவும்

"**ஓரை ஆயமொடு பந்து சிறிது எறியினும்**" (**அகம்.பா**.219:2)

என்ற பாடலடி வாயிலாகவும் அறியலாகின்றது. மேலும்தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்ட தலைவி தன்னுடன் வரிப்பந்தினை எடுத்துச்சென்றாள் என்பதனை

"**வரி புனை பந்தொடு வைஇய செல்வோள்**" (**நற்.பா**.12:6)

என்ற பாடலடி விளக்குகின்றது. மேலும்

"**கோதைப் பரிந்து வரிப்பந்து கொண்டோடி**
**நோதக்கச் செய்யும் சிறுபட்டி**" (**கலி.பா**.51:3-4)

என்ற பாடலடிகளின் வாயிலாகவும் பந்தாடுதல் குறித்து அறிந்து கொள்ள இயலுகின்றது.

**ஓரையாடுதல்:**

சங்ககால மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று ஓரையாடுதல். ஓரை என்றால் ஒலி எழுப்புதல் என்று பொருள். இஃது ஆரவாரம் செய்து கொண்டு விளையாடுவது ஆகும். ஓரையாடுதலானது ஆற்று மணல்சேற்று நிலம்கடற்கரை மணல்முற்றத்தில் பரப்பப்பட்ட மணல் ஆகிய இடங்களில்


http://Creativecommons.org//license/by/4.0/.

விளையாடப்படும் விளையாட்டாகும். மகளிர் தம் விளையாட்டுத் தோழியருடன் சிலம்பொலி கேட்க ஓடி விளையாடியதை

**"கோதை ஆயமொடு ஓரை தழீஇ தோடமை அரி**
**சிலம்பு ஒலிப்ப அவள் ஆடுவழி" (அகம்.பா.**49:15-16)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாம். மேலும்வீட்டு முற்றத்தில் பரப்பப்பட்ட மணலில் 'ஒய்' என்று ஒலி எழுப்பிக்கொண்டு மகளிர் ஓரை ஆடியமையை

**"……………..ஒய்யெனத்**
**தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து**
**ஓரை ஆயமும் நொச்சியும் காண்தொறும்" (நற்.பா**.143:1-3)

என்ற பாடலடிகளின் வாயிலாகவும் அறியலாகின்றது. ஆமைநண்டு ஆகியவற்றைக் கோல் கொண்டு அலைத்து விளையாடுவது ஓரையாடுதலில் ஒரு வகையாகும். இவ்விளையாட்டை அலவனாட்டல் என்று பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

**வண்டலிழைத்தல்:**

வண்டல் மணலால் ஒரு பாவை செய்து அதற்குப் பூச்சூட்டி மகிழ்ந்து விளையாடும் விளையாட்டிற்கு வண்டலிழைத்தல் என்று பெயர். சங்ககால மகளிர் வஞ்சி மாநகரில் பொருநை ஆற்று மணலில் பாவை செய்து பூப்பறித்து வந்து சூட்டி மகிழ்ந்தமையை

"**வால் இழை மடமங்கையர்**
**வரி மணற் புனை பாவைக்குக்**
**குலவுச் சினைப் பூக்கொய்து" (புறம்.பா.**11:2-4)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது. தலைவி சிறுவயதில் பால் பேதமின்றி பாவை செய்து விளையாடியமையை

"………… **திணிமணல்**
**செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்" (புறம்.பா**.243:1-2)

என்ற பாடலடிகள் பதிவு செய்துள்ளன. வண்டல் விளையாட்டினை சிறுவர்களும் தங்கள் ஆயத்துடன்குவிந்து கிடந்த மணல் மேட்டில் விளையாடியமையை

"**கோதை ஆயமொடு குவவு மணல்ஏறி**
**வீ ததை கானல் வண்டல் அயர" (அகம்.பா.**180:1-2)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது.

**ஏறுதழுவுதல்:**

சங்க கால மக்களின் விளையாட்டுகளுள் வீர விளையாட்டாகக் குறிக்கப்படுவது ஏறுதழுவுதலாகும். ஏறுதழுவுதல் என்பது முல்லை நிலத்தில் நடைபெறும் விளையாட்டாகும். ஆயர்களின்; ஆநிரைகளைக் காப்பதற்காக ஆயர்குல வீரனின் வீரத்தை நிலை நாட்டும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டதே இவ்விளையாட்டாகும்.

இத்தகைய ஏறுதழுவுதல் நடைபெறுவதற்குக் காரணமான ஒன்று உள்ளப்புணர்ச்சி. மற்றொன்று ஆயன் தனனுடைய வீரத்தை நிலைநாட்டுதலாகும். "கூரிய கொம்புகளை உடைய


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

எருதுகளை ஆயுதம் ஏதுமின்றித் தம் உடல் வலிமையால் இளைஞர்கள் அடக்குவர். இவ்வீர விளையாட்டில் தம் உயிரைப் பொருட்படுத்தாமல் அடக்கியும்ஊர்ந்தும் மகிழ்வர். ஆயர்குடிப் பெண்கள் இத்தகு வீர விளையாட்டுக்காகவே காளைகளை வளர்ப்பர். இவ்விளையாட்டில் வெற்றி பெறும் இளைஞனை விரும்பி மணந்துள்ளனர்"8 என்று குறிப்பிடுவர்.

ஆயமகளை மணமுடிக்க வேண்டுமானால் கொடிய போரேற்றைத் தழுவி வெற்றி பெற வேண்டும். இல்லையேல் அவளை மணமுடிக்க இயலாது என்பதை

**"ஓஓ! இவள்பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்**
**திருமா மெய் தீண்டலர் என்றுகருமமா**
**எல்லாரும் கேட்ப அறைந்துஎப்பொழுதும்**
**சொல்லால் தரப்பட் டவள்" (கலி.பா.101:9-12)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது. கொல்லேற்றினை தலைவன் அடக்கிய பின்பு தலைவனோடு தலைவியின் மணம் உறுதியானதை

**"இன்று எவன்என்னை எமர் கொடுப்பது-அன்றுஅவன்**
**மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்**
**புக்கக்கால் புக்கதுஎன் நெஞ்சு!" (கலி.பா.105:66-68)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. ஏறுதழுவி வென்ற வீரனையே ஆயர்குலப்பெண்கள் மணக்கவும் விரும்பினர் என்பதையும்கெல்லேற்றுக்கு அஞ்சுகின்றவனை ஆயமகள் விரும்பவில்லை என்பதையும்

**"கொல்லேற்றுக் கோடஞ்சுவாணை மறுமையும்**
**புல்லாளேஆய மகள்" (கலி.பா.103.63-64)**

என்ற பாடலடிகள் பதிவு செய்துள்ளன. இவற்றின் வாயிலாக சங்க விளையாட்டுகளுள் ஆடவர் விளையாடிய வீர விளையாட்டாக ஏறுதழுவுதல் திகழ்ந்துள்ளது என்பதையும்ஏறுதழுவுதல் சமூகத்தில் பெற்ற முதன்மையையும் அவ்விளையாட்டு சமூக செயல்பாடாக திகழ்ந்தமையையும் அறியலாகின்றது.

சங்ககாலமக்களின் விளையாட்டுகள் மக்களிடம் மகிழ்ச்சியையும்இணக்கத்தையும் ஏற்படுத்தியதோடு சமூகம் சார்ந்த செயல்பாடாகவே இருந்துள்ளன. மேலும்இனக்குழு மக்களிடையே நிலவிய விளையாட்டுகள் வேளாண்மையி ;ன் வளர்ச்சியால் உருவான நிலவுடைமைச் சமூகத்தில் ஏற்பட்ட பொருளியல் தாக்கத்தினால் பொருளை முதன்மைப்படுத்தியே மிகுதியும் விளையாட்டுகள் தோன்றியுள்ளன. சங்ககால மக்கள் விளையாட்டினை பொழுது போக்கிற்காக விளையாடினாலும் விளையாட்டுகள் ஒரு சமூக செயல்பாடாக இருந்துள்ளமையை இலக்கியங்கள் வாயிலாக அறியலாகின்றது. நடைமுறை வாழ்வினை வெளிப்படுத்தும் இலக்கியங்களில் பதிவு


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

செய்யப்பட்டுள்ள மக்களின் வாழ்வியல் நடைமுறையோடு ஒன்றிப்போன விளையாட்டுகள்சங்க கால மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளமையை அறியலாகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர் சு.சிவகாமசுந்தரிசங்க இலக்கிய விளையாட்டுக்களஞ்சியம்ப.2
2. மேலதுப..3
3. விலங்குப்போர் விளையாட்டு ஆராய்ச்சி தொகுதிஇராகவையங்கார்ப.297
4. முனைவர் சு.சிவகாமசுந்தரிமு.நூ.ப.2
5. முனைவர் சு. சிவகாமசுந்தரிமு.நூ.ப.53
6. மேலதுப.75
7. மேலதுப.81
8. மேலதுப.47


http://Creativecommons.org//license/by/4.0/.